## இயல் : 2. பராபரக் கண்ணி

வகுப்பு : VI

பாடம் : தமிழ்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ............

அ) தம்முயிர் ஆ) தமதுயிர் இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்

2.இன்புற்று+இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............

அ) இன்புற்றிருக்க ஆ) இன்புறுறிருக்க

இ) இன்புற்று இருக்க ஈ) இன்புறு இருக்க

3. தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...........

அ) தானெ+என்று ஆ) தான்+என்று இ) தா+னென்று ஈ) தான்+னென்று

4.சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ............

அ) அழிவு ஆ) துன்பம் இ)சுறுசுறுப்பு ஈ) சோகம்

### ஆ. நயம் அறிக

1. பராபரக்கண்ணி பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

பராபரக்கண்ணி பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்கள்:

**எதுகை :**

தம் உயிர்போல் - செம்மையருக்கு
அன்பர்பணி - இன்பநிலை
எல்லாரும் - அல்லாமல்

**மோனை :**

தம்உயிர்போல் - தண்டருள்
இன்புற்று - இருக்க
அல்லாமல் - அறியேன்

### இ. குறுவினா

**1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?**

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

**2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?**

அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராகத் தன்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்.

### ஈ. சிறுவினா

**1. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?**

(i) அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

(ii) அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராகத் தன்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்.

(iii) எல்லாரும் இன்பமாக வாழவேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்கமாட்டேன்.

**உ. சிந்தனை வினா**

**1. குளிரால் வாடுபவர்களுக்கு நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?**

குளிரால் வாடுபவர்களுக்குப் போர்வை தருவேன். வீட்டில் தேவைக்கு அதிகமாக உள்ள போர்வையைத் தருவேன். இல்லையெனில், புதிய போர்வை வாங்கித் தருவேன். அரசாங்கத்தால் நடத்தப்படும் இலவச ஆதரவற்றோர்க்கான இல்லங்களில் தங்க வைப்பேன்.

## கவிதைப்பேழை - நீங்கள் நல்லவர்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பரிசு பெறும்போது நம் மனநிலை ........................ ஆக இருக்கும்.

அ) கவலை　　ஆ) துன்பம்　　**இ) மகிழ்ச்சி**　　ஈ) சோர்வு

2. வாழ்வில் உயர கடினமாக .................. வேண்டும்.

அ) பேச　　ஆ) சிரிக்க　　இ) நடக்க　　**ஈ) உழைக்க**

**ஆ. குறுவினா**

**1. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?**

பழத்தின் இயல்பு கொடுப்பது; வேரின் இயல்பு பெறுவது.

**2. உழைக்கும்போது என்னவாக ஆகிறோம்?**

உழைக்கும் போது நாம் புல்லாங்குழலாகிறோம்.

**இ. சிந்தனை வினா**

**1. நல்லவர் என்னும் பெயர் பெற நாம் என்ன செய்யலாம்?**

நல்லவர் என்னும் பெயர் பெற நாம் செய்ய வேண்டுவன :

**வீட்டில் :**

(i) பெற்றோர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நடத்தல்.

(ii) பெரியோரை மதித்தல்.

(iii) வீட்டில் உள்ள தாத்தா பாட்டியிடம் மரியாதையுடன் பேசுதல், அவர்கள் கூறுவதைக் கேட்டல், அவர்களுடன் அன்புடன் பழகுதல்.

(iv) வீட்டில் அப்பா அம்மாவிற்குச் சிறுசிறு வேலைகள் செய்தல்.

**பள்ளியில் :**

(i) ஆசிரியர்கள் கூறும் வீட்டுப் பாடங்களை முடித்து வருதல்.

(ii) வகுப்பில் பாடம் நடத்தும்போது கூர்ந்து கவனித்தல்.

(iii) மெல்லக் கற்கும் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல். அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெறுவதற்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தல்.

(iv) சக மாணவர்களுடன் சண்டையிடாமல் அன்புடன் பழகுதல். பிறர் குறைகளைக் கூறாமல் நிறைகளை மட்டும் கூறுதல்.

**பொது இடங்களில் :**

(i) நாம் செல்கின்ற வழியில் யாருக்காவது உதவி தேவைப்பட்டால் உதவி செய்தல் (சாலையைக் கடப்பது, அவர்கள் செல்கின்ற இடத்திற்கு வழி கூறுதல்...... போன்றவை)

(ii) விபத்து நேரிட்டால் முதலுதவி செய்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுதல் போன்றவற்றைச் செய்கின்றவர்கள் நல்லவர் என்ற பெயர் பெறுவார்கள்.

**2. உங்கள் குறிக்கோளை அடைய நீங்கள் செய்யும் முயற்சிகளை எழுதுக.**

**என்னுடைய குறிக்கோள் - சிறந்த மட்டைப்பந்து விளையாட்டு வீரர் ஆதல்:**

(i) எனக்குள் பல விருப்பங்கள், இலட்சியங்கள் இருந்துகொண்டே இருக்கும். என் மனமும் அவற்றை அசைபோட்டுக் கொண்டே இருக்கும். ஆனாலும் அவற்றுள் மட்டைப்பந்து விளையாட்டில் மாநில அளவில், தேசிய அளவில், உலக அளவில் என முதலிடம் பெற்று இவ்வுலகையே என்னைப் பார்க்கச் செய்ய வேண்டும் என்பதே என் குறிக்கோள்.

(ii) என் விருப்பமே என்னுடைய குறிக்கோளாக மாற்றம் பெற்றுள்ளது. இந்த இலட்சியப் பாதையைக் கடப்பதற்கு நான் செய்ய வேண்டியன, பல ஆசைகள் இருந்தாலும் ஒன்றை மட்டும் தேர்வு செய்வேன்.

(iii) இவ்விளையாட்டில் வெற்றிபெறுவதற்கு முடியுமா? முடியாதா? சரியா? சரியில்லையா? என்று யோசித்துத் தீர்மானம் செய்துகொள்வேன்.

(iv) 'திட்டமிட்டுச் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம்' என்பதால் திட்டமிடுவேன். பள்ளிக்குச் செல்லும் நேரம், பாடங்களைப் படிப்பதற்கான நேரம், காலை, மாலை விளையாடுவதற்கான நேரம் இவற்றைத் திட்டமிடுவேன்.

(v) திட்டமிட்டபடி தினமும் விளையாடுவேன். என்னுடைய முயற்சியும் தினம் தினம் செய்யும் பயிற்சியும் என்னை வெற்றி பெறச் செய்யும். இவ்வாறு என் குறிக்கோளை அடைவேன்.

## உரைநடை - பசிப்பிணி போக்கிய பாவை

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ...........

அ) இலங்கைத் தீவு ஆ) இலட்சத் தீவு

**இ) மணிபல்லவத் தீவு** ஈ) மாலத் தீவு

2.மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண்.......

அ) சித்திரை **ஆ) ஆதிரை** இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

**ஆ. சொற்றொடரில் அமைத்து எழுதுக**

அ) செடிகொடிகள் - செடிகொடிகள் வளர்ப்பதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு.

ஆ) முழுநிலவு நாள் - முழுநிலவு நாள் பௌர்ணமி என்று

அழைக்கப்படும்.

இ) அமுதசுரபி - அமுதசுரபி அள்ள அள்ளக் குறையாமல் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

ஈ) நல்லறம் - இல்லறம் சிறக்க ஒவ்வொருவரும் நல்லறச் செயல்களைச் செய்ய வேண்டும்.

## இ. குறுவினா

### 1.அமுதசுரபியின் சிறப்பு யாது?

அமுதசுரபியில் இட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும். அதனைக் கொண்டு எத்தனைப் பேருக்கு வேண்டுமானாலும் உணவு அளிக்கலாம்.

### 2. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?

(i) சிறைச்சாலையில் தண்டனை பெற்றுள்ளவர்கள் திருந்தி வாழ வழிகாண வேண்டும்.

(ii) சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற வேண்டும்.

## ஈ. சிறுவினா

### 1. மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?

மணிபல்லவத்தீவில் எங்குப் பார்த்தாலும் வெண்மணல் குன்றுகள் இருந்தன. பூத்துக் குலுங்கும் செடிகொடிகள், அடர்ந்த மரங்கள், இடையே பொய்கைகள் ஆகியன இருந்தன. மனதை மயக்கும் காட்சிகளைத் தந்தது **மணிபல்லவத்தீவு**.

### 2. “கோமுகி” என்பதன் பொருள் யாது?

(i) மணிபல்லவத்தீவில் பூக்கள் நிறைந்து விளங்கும் பொய்கைக்குப் பெயர் கோமுகி.

(ii) ‘கோ’ என்றால் பசு. ‘முகி’ என்றால் முகம்.

(iii) பசுவின் முகம் போன்று அமைந்து இருப்பதால் அந்தப் பொய்கை கோமுகி எனப் பெயர் பெற்றது.

## உ. சிந்தனை வினா

### 1. அறச்செயல்கள் என்று நீங்கள் எவற்றை எல்லாம் கருதுகிறீர்கள்?

**அறச்செயல்கள் :**

(i) உயர்ந்த நற்குணங்களுடன் எல்லோரிடத்திலும் அன்புடன் பழகுதல்.

(ii) அனைத்து உயிர்களிடத்திலும் கருணையுடன் இருத்தல்.

(iii) நல்லவர்களிடம் கொள்ளும் நட்பு.

(iv) அறநூல்களில் கூறப்பட்ட ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல்.

(v) எளியோருக்கு ஈதல்.

(vi) எளியோரையும் நல்ல முறையில் உபசரித்தல்.

(vii) ஐம்புலன்களையும் அடக்கி நல்வழியில் செலுத்துதல்.

(vii) ஏழைகளுக்குத் தகுந்த உதவி செய்தல், உணவளித்தல், உவகையுடன்

தானமளித்தல்.

(ix) பணிவுடன் நடந்து கொள்ளுதல்.

(x) எந்நிலையிலும் உண்மையைப் போற்றுதல்.

(xi) பசித்தோர்க்கு உணவளித்தல்.

(xii) தீய வழியில் செல்லாமல் இருத்தல்.

## விரிவானம் - பாதம்

**1.பாதம் கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

மாரி என்பவர் காலணி தைக்கும் ஒரு தொழிலாளி. அவர் பசியால் வாடிக்கொண்டிருந்தார். திடீரென ஒரு விசித்திரக் காலணியின் மூலம் செல்வந்தர் ஆனார். ஆனாலும் அவர் மனம் ஏதோ ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அவற்றை விளக்கும் கதையைக் காண்போம்.

**வெறிச்சோடிய தெரு :**

மாரி என்றைக்கும் போல் தியேட்டர் வாசலில் உட்கார்ந்திருந்தார். விடாமல் காற்றுடன் மழை பெய்து கொண்டிருந்தது. டீ குடிப்பதற்குக் கூட பணம் இல்லை. மழையில் எவரேனும் காலணி தைக்கக் கொடுத்தால் பணம் கிடைக்கும். டீ குடிக்கலாம் என எண்ணினார். தெரு வெறிச்சோடி இருந்தது. அவரும் ஒரு மரமும் எட்டுப் பழைய செருப்புகளும் மட்டும் இருந்தன.

**சிறுமியின் காலணி :**

தியேட்டரின் வலப்புறச் சந்தில் இருந்து சிறுமியொருத்தி மீனைப்போலச் சுழன்று அவர் அருகில் வந்து ஒரு காலணியைக் கொடுத்துத் தைத்து வைக்கும்படிக் கூறிவிட்டுச் சென்றாள். அந்தக் காலணி இளம் சிவப்பு நிறத்தில் வெல்வெட் தைத்துப் பூ வேலை கொண்டதாய் இருந்தது. அந்தக் காலணியில் ஏதோ பெயரிடப்படாத நறுமணம் வீசியது. காலணியைத் தைத்து முடித்துவிட்டு அச்சிறுமிக்காகக் காந்திருந்தார். இரண்டு ரூபாய் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்தார். அச்சிறுமி இரவு வரை வரவேயில்லை. மழை பெய்வதால் வரவில்லை என எண்ணியவராய் அந்தக் காலணியை வீட்டிற்கு எடுத்துச் சென்றார்.

**மாரியின் ஏமாற்றம் :**

அடுத்த நாள் மாரி அந்தக் காலணியைத் துடைத்து, தனது நீலநிற விரிப்பில் வைத்துவிட்டு வேலையைத் தொடங்கினார். அன்றும் அந்தச் சிறுமி வரவில்லை. மறந்துவிட்டாளா? இல்லை யாரிடம் கொடுத்தோம் எனத் தெரியாமல் அளைகிறாளா? என்று எண்ணியபடி அன்றும் அக்காலணியை வீட்டிற்கு எடுத்துச் சென்றார். இப்படியே. பல நாட்கள் கழிந்தன.

**மாரியின் மனைவி :**

மாரியின் மனைவி ஓர் இரவில் அந்தக் காலணியைக் கண்டாள் அதன் வசீகரம் அவளை ஈர்த்தது. அதனைப் போட்டுப் பார்த்தாள். அளவில் சிறியதாக இருந்தாலும் அவளுக்குச் சரியாக இருந்தது. மற்றொரு காலணியைத் தேடிப் பையைக் கொட்டினாள். சப்தம் கேட்டு மாரி வந்து பார்த்தார். மனைவியின் வலக்காலில் இருந்த அந்தக் காலணியைப் பார்த்தார். மனைவியைத் திட்டி விட்டு காலணியை எடுத்துப்

பார்த்தார் கிழியவில்லை. சிறுமியின் காலணி மனைவிக்குப் பொருந்தியதை எண்ணி வியந்தார். அவருக்கும் அந்தக் காலணியின் மீது ஆசை ஏற்பட்டதால் தன் வலக்காலை அதனுள் நுழைத்துப் பார்த்தார். அவருக்கும் பொருந்தியது. இது விசித்திரமாய் இருந்தது. அவரால் யோசிக்க முடியவில்லை. உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பையில் போட்டுக் கொண்டார்.

**காலணியின் விசித்திரம் :**

மறுநாள் மாரி அவருடன் தொழில் செய்பவரிடம் இந்தக் காலணியின் விசித்திரம் பற்றிக் கூறினார் அவரும் போட்டுப் பார்த்தார் பொருத்தமாக இருந்தது. இச்செய்தி நகர் முழுவதும் பரவியது சிறியவர் முதல் முதியவர் வரை அந்தக் காலணி அனைவருக்கும் பொருந்தியது. அதனைக் காலில் அணிந்தால் மேகத்துணுக்குகள் காலடியில் பரவுவது போலவும் பனியின் மிருது படர்வது போலவும் இருப்பதாகப் பலர் கூறினர். கோடைக்காலம் வந்தது அந்தக் காலணியை அணிந்து பார்த்தவர்கள் அவர்களாகவே பணம் கொடுத்தனர். அப்பணத்தில் இரண்டு பசு வாங்கினார். வீடு கட்டினார் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்தார். இந்நிலையிலும் அச்சிறுமியை அவர் தேடிக் கொண்டேதான் இருந்தார்.

**முப்பது வருடப் பயணம் :**

மாரி வருவதற்கு முன்பாகவே பலர் வந்து மரத்தடியில் காத்திருப்பார்கள். காலணியை அணிந்து பார்ப்பார்கள் முகத்தில் சந்தோஷம் பீறிடும். கலைந்து போவார்கள் முப்பது வருடம் கடந்தது. ஒரு நாள் இரவு மாரி வீடு திரும்பும்போது அக்காலணியைத் திருட முனைந்த இருவர் தடியால் அடித்தனர். காலணி திருடு போகவில்லை . தலையில் பட்ட அடியால் அவர் பலவீனமானார். அன்றிலிருந்து வெளியில் செல்லவில்லை பார்வையாளர்கள் அவர் வீடு தேடி வந்து சென்றனர். அவருடைய மனதில் மட்டும் அச்சிறுமியினால் நாம் வளர்ந்தோம். இறப்பதற்குள் அவளைப் பார்க்க வேண்டுமே' என வேதனையுற்றார்.

**மீண்டும் வந்த சிறுமி :**

ஒரு மழை இரவில் பார்வையாளர்கள் வந்து சென்றதும் மத்திய வயதில் ஒரு பெண் நனைந்தபடி நின்றிருந்தாள். அவள் தணிவான குரலில் சொன்னாள். "வெகு தாமதமாகிவிட்டது எனது காலணியைத் தைத்துவிட்டீர்களா இல்லையா?" என்றாள். அவளை அடையாளம் கண்டு கொண்டார் மாரி "வலது காலணியை தைக்கக் கொடுத்தது நினைவிருக்கிறதா?" என்றாள். மாரி தன்னிடம் இருந்த காலணியைக் காட்டினார். "இந்தக் காலணி உலகின் எல்லாப் பாதங்களுக்கும் பொருந்துகிறது" என்று கூறினார்.

**சிறுமியின் செயல் :**

சிறுமி ஆச்சரியமின்றித் தலையாட்டி விட்டு தன்னிடம் இருந்த நாணயம் எதையோ கூலியாகக் கொடுத்துவிட்டுக் காலணியைப் பெற்றுக் கொண்டாள். அவள் யார் என அறிவதற்காக மாரி அவளிடம் யார் எனக் கேட்ட கேள்விக்குப் பதில் கூறாமல் சென்றுவிட்டாள். அவள் இரு காலணிகளையும் தரையிலிட்டுக் காலில் அணிய முயன்றாள். அவள் கொண்டு வந்த இடது காலணி பொருந்தியது தைத்து வாங்கின வலது காலணி பொருந்தவில்லை சிறியதாக இருந்தது.

## கற்கண்டு - பெயர்ச்சொல்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இடுகுறிப்பெயரை வட்டமிடுக.

அ) பறவை   **ஆ) மண்**   இ) முக்காலி   ஈ) மரங்கொத்தி

2. காரணப்பெயரை வட்டமிடுக.

அ) மரம்   **ஆ) வளையல்**   இ) சுவர்   ஈ) யானை

3. இடுகுறிச்சிறப்புப் பெயரை வட்டமிடுக.

அ) வயல்   **ஆ) வாழை**   இ) மீன்கொத்தி   ஈ) பறவை

### ஆ. குறுவினா

**1. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?**

பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவை

(i) பொருட்பெயர்
(ii) இடப்பெயர்
(iii) காலப்பெயர்
(iv) சினைப்பெயர்
(v) குணப்பெயர்
(vi) தொழிற்பெயர்

**2. இடுகுறிப்பெயர் என்றால் என்ன?**

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் இட்டு வழங்கிய பெயர் இடுகுறிப்பெயர் ஆகும். (எ.கா.) மண், மரம், காற்று.

**3. காரணப்பெயர் என்றால் என்ன?**

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதி இட்டு வழங்கிய பெயர் காரணப்பெயர் ஆகும். (எ.கா.) நாற்காலி, கரும்பலகை.

### இ. சிறுவினா

**1. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.**

பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர்.

**2.அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.**

அறுவகைப் பெயர்ச்சொற்கள் :

| | | |
|---|---|---|
| (i) பொருட்பெயர் | - | மயில், பறவை |
| (ii) இடப்பெயர் | - | தெரு, பூங்கா |
| (iii) காலப்பெயர் | - | நாள், ஆண்டு |
| (iv) சினைப்பெயர் | - | இலை, கிளை |
| (v) பண்புப்பெயர் | - | செம்மை, நன்மை |
| (vi) தொழிற்பெயர் | - | ஆடுதல், நடித்தல். |

ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

## மொழியை ஆள்வோம்

### அ. குறிப்புகளைக் கொண்டு கதை எழுதுக

**1. நாய்க்குட்டி - குழிக்குள் - கத்தும் சத்தம் - முகிலன் - முதலுதவி - பால் - தூங்கியது - வாலாட்டியது.**

முகிலன் ஒருமுறை வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது நாய்க்குட்டி ஒன்று கத்தும் சத்தம் கேட்டது. எங்கிருந்து சத்தம் வருகிறது என்று சுற்றிச் சுற்றிப் பார்த்தான். சாலையோரத்தில் இருந்த குழிக்குள் நாய்க்குட்டி ஒன்று விழுந்து கிடந்தது. மேலே ஏறுவதற்கு இயலாததால் கத்திக் கொண்டிருந்தது. முகிலன் அப்பள்ளத்தில் இறங்கி அந்நாய்க்குட்டியைத் தூக்கினான்.

அதற்கு முதலுதவி செய்தான். அதற்குக் கொஞ்சம் பால் ஊற்றினான். அந்நாய்க்குட்டி பாலைக் குடித்துவிட்டு சோர்வில் தூங்கியது. கொஞ்ச நேரத்தில் கண் விழித்துப் பார்த்தது. முகிலனைப் பார்த்து வாலாட்டியது. இக்கதையின் மூலம் உயிர்களிடத்தும் இரக்கம் காட்ட வேண்டும் என்பதை உணரலாம்.

### ஆ. அகராதியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக.

1. கருணை - இரக்கம்
2. அச்சம் - பயம்
3. ஆசை - விருப்பம்

### இ. கீழ்க்காணும் பெயர்ச் சொற்களை அகரவரிசையில் எழுதுக

1. பூனை, தையல், தேனி, ஓணான், மான், வெளவால், கிளி, மாணவன், மனிதன், ஆசிரியர், பழம்.

**அகரவரிசை:**

1. ஆசிரியர் 2. ஓணான் 3. கிளி 4. தேனி 5. தையல் 6. பழம்
7. பூனை 8. மனிதன் 9. மாணவன் 10. மான் 11. வெளவால்.

### ஈ. பின்வரும் வாக்கியங்களில் உள்ள அறுவகைப் பெயர்களை எடுத்து எழுதுக

1. கைகள் இரண்டும் பிறர்க்கு உதவவே எனச் சான்றோர் கருதினர்.
   (i) கைகள் - சினைப்பெயர்
   (ii) சான்றோர் - பொருட்பெயர்

2. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூலின் பயனாகும்.
   அடைதல் - தொழிற்பெயர்.

3. குழந்தை தெருவில் விளையாடியது.
   தெருவில் - தொழிற்பெயர்.

4. நீதிநூல் பயில் என்கிறார் பாரதியார்.
   நீதிநூல் - பொருட்பெயர்

5. மாலை முழுதும் விளையாட்டு.
   மாலை - காலப்பெயர்.

6. அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்.

மேலோர் - பொருட்பெயர்.

**உ. பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்கள் எவ்வகைப் பெயர்கள் என எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. விடியலில் துயில் எழுந்தேன். | விடியல் | காலப்பெயர் |
| 2. இறைவனைக் கை தொழுதேன். | கை | சினைப்பெயர் |
| 3. புகழ்பூத்த மதுரைக்குச் சென்றேன் | மதுரை | இடப்பெயர் |
| 4. புத்தகம் வாங்கி வந்தேன். | புத்தகம் | பொருட்பெயர் |
| 5. கற்றலைத் தொடர்வோம் இனி. | கற்றல் | தொழிற்பெயர் |
| 6. நன்மைகள் பெருகும் நனி. | நன்மைகள் | பண்புப்பெயர் |

**ஊ. சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துங்கள்**

1. மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்
2. அமுதசுரபியைப் பெற்றாள்.
3. ஆதிரையிடம் சென்று முதல் உணவைப் பெற்றாள்.
4. சிறைச்சாலைக்குச் சென்று உணவிட்டாள்.
5. சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினாள்.

**எ. ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

**1. அரம்** - அறம்

அரம் - கூர்மையான கருவி - இரும்பைத் தேய்த்துக் கூர்மையாக்குவதற்கு அரம் பயன்படும்.

அறம் - தர்மம் - பழந்தமிழர்கள் அறச்செயல்களில் சிறந்து விளங்கினர்.

**2. மனம்** - மணம்

மனம் - உள்ளம் - பிறருக்கு உதவி செய்வதற்கு மனம் வேண்டும்.

மணம் - வாசனை - மல்லிகை மணம் மிக்க மலர்.

**ஏ. இருபொருள் தருக**

(எ.கா) ஆறு

ஆறு - நதி

ஆறு - எண்

**1.திங்கள்**

திங்கள் - கிழமை, மாதம், நிலவு

**2. ஓடு**

ஓடு - ஓடுதல், வீட்டின் கூரையாகப் பயன்படுவது

**3. நகை**

நகை - அணிகலன், புன்னகை

## ஐ. கட்டத்தில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

| | |
|---|---|
| மாலையில் | கற்போம் |
| பிறருக்கு உதவி | எழுவோம் |
| பெரியோரை | விளையாடுவோம் |
| நூல் பல | செய்வோம் |
| உடற்பயிற்சி | புரிவோம் |
| அதிகாலையில் | வணங்குவோம் |

1. மாலையில் விளையாடுவோம்.
2. பிறருக்கு உதவி புரிவோம்.
3. பெரியோரை வணங்குவோம்.
4. நூல்பல கற்போம்.
5. உடற்பயிற்சி செய்வோம்.
6. அதிகாலையில் எழுவோம்.

## திருக்குறள்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏழைகளுக்கு உதவி செய்வதே .................. ஆகும்.
   அ) பகை ஆ). ஈகை இ) வறுமை ஈ) கொடுமை
2. பிற உயிர்களின் ............... க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.
   அ) மகிழ்வை ஆ) செல்வத்தை இ) துன்பத்தை ஈ) பகையை
3. உள்ளத்தில் ............... இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
   அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு இ) துணிவு ஈ) குற்றம்

### ஆ. இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக

1. வறியார்க்கொன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்
   குறியெதிர்ப்பை உடைத்து நீரது.

   வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
   குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

2. எனைத்தானும் யார்க்கும் எஞ்ஞான்றும் மனத்தானாம்
   மாணாசெய் தலை யாமை.

   எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
   மாணாசெய் யாமை தலை.

### இ. குறுவினா

**1. அறிவின் பயன் யாது?**

பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதுவதே அறிவின் பயன் ஆகும்.

**2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?**

தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்.

**3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?**

இல்லாதவர்க்குத் தருவதே ஈகை ஆகும். மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை அகும்.

**ஈ. பின்வரும் நிகழ்வைப் படித்து அதற்குப் பொருத்தமான திருக்குறள் எதுவெனக் காண்க**

நிறைமதி அவளுடைய தோழிகளுடன் பூங்காவிற்குச் சென்றாள். அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தாள். நண்பகல் நேரத்தில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து தான் கொண்டு வந்திருந்த உணவைத் தோழிகளுடன் பகிர்ந்து உண்டாள். அவர்களின் அருகே பறவைகள் பறந்து வந்தன. தன்னிடம் இருந்த உணவைப் பறவைகளுக்கும் அளித்தாள்.

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
   ஆகுல நீர பிற.
2. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
   மாணாசெய் யாமை தலை.
3. **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
   **தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.**

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER